# அகத்திணை வாழ்வின் இருவேறு நிலைகள்

***முனைவர் ஸ்ரீ. ஸ்ரீ ஜெயந்தி***
*உதவி பேராசிரியர், தமிழ்த்துறை*
*கேஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*கோவை*

**களவு-கற்பு**

அகத்துறையில், காதல் இன்பத்தைத் துய்ப்பதில், களவு, கற்பு என்ற இருவேறு நிலைகள் உள்ளன. அகப்பொருள் பாடல்களைப் பயில்வோர் இந்த இரண்டு நிலைகளையும் காண்பர். காதலனும் காதலியும் தொல்காப்பியர் கூறும் பால்வரைத் தெய்வம் என்ற ஊழின் துணையால், முன்பின் அறியாதவர்களாக இருந்தாலும் ஓரிடத்தில் சந்தித்துக் காதல் கொள்ளுகின்றனர். கலந்து இன்பந்துய்க்கின்றனர் இதனைக் களவு என்று அகப்பொருள் இலக்கணம் கூறும் இவ்வாறு களவு முறையில் காதல் புரிபவர்கள் பிறகு, பல்லோரறிய மணந்து கொள்வர். இதனைக் கற்பு என்று கூறுவர், அகப்பொருள் நூலார். முதலில் களவு ஒழுக்கத்தில் ஈடுபட்டு அப்பால் திருமணம் புரிந்து கொண்டு, இல்வாழ்க்கையாகிய கற்பொழுக்கத்தை மேற்கொள்வது 'களவின் வழி வந்த கற்பு' என்று சொல்லப்பெறும், இக்களவுஒழுக்கமே நிகழாமல் முதலிலேயே திருமணம் செய்துகொண்டு கணவன் மனைவியாக வாழும் நிலையும் அக்காலத்தில் இருந்தது. 'களவின் வழி வாராக் கற்பு' என்று இதனைக் குறிப்பர், மற்ற இரண்டு வகைக் கற்பிலும் களவின்வழி வந்த கற்பே சிறப்புடையது என்று பண்டையத் தமிழர்கள் எண்ணினர் அகவாழ்வில் காணும் இந்தக் களவு,கற்பு என்ற இரண்டு கைகோள் வகைகளையும் பற்றி ஓரளவு விரிவாகத் தெரிந்துகொள்வோம் கைகோள்- 'ஒழுக்கங்கள் என்பர் நச்சினார்க்கினியர், ஒழுக்கம் என்பது அதன் கருத்து.

**களவு-விளக்கம்**

களவாது 'பிணி மூப்புகளின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய், உருவுமடதிருவும் பருவமும் குணனுங்குலமும் அன்பும் முதலியவற்றால் ஒப்புமையுடையராய தலைமகனும் தலைமகளும் பிறர்கொடுப்பவும் அடுப்பவுமின்றி, ஊழ் வகையால் தாமே எதிர்ப்பட்டுக் கூடுதல்." தமது மகள் பிறர்க்கு உரியவள் என்று இருமுதுகுரவரால் (பெற்றோரல்) கொடை எதிர்த்தற்குரிய தலைவியை, அவர் கொடுப்பக் கொள்ளாது, இருவரும் கரந்த உள்ளத்தோடு எதிர்ப்பட்டுப் புணர்தலின் களவு எனப் பெயர் பெற்றது. இக்களவுஅன்பொடு புணர்ந்ததாலின் 'காமக்கூட்டம்' என்றும் வழங்கப்பெறும்.இன்னும் இதனை 'மறைந்த ஒழுக்கம்' 'மறை' 'அருமறை' என்ற சொற்களாலும் தொல்காப்பியர் குறிப்பர்.

களவு என்பதற்குப் பிறர்க்குரிய பொருளை மறையிற்கோடல் என்று பொருள் கூறுவர் இளம்பூரணர். வேதத்தை 'மறைநூல்' என்று சொல்வது போலவே, அறநிலை வழுவாமல் காதலர்கள் கரந்து ஒழுகும் இதனைக் 'களவு' என்று பண்டையோர் குறித்துள்ளனர் என்பதை அறிதல் வேண்டும். 'களவு என்னும் சொற்கேட்பாடுக் களவு தீ தென்பதூம் உம் அன்றுமற்று அவை நல்ல ஆமாறும் உண்டு.' (இறையனார் களவியல் நூற்பாஇன் உரை) என்று களவியல் உரைகாரர் கூறுவதையும் அதற்கு அவர் கூறும் சான்றுகளையும் இவ்விடத்தில் சிந்தித்துப்பார்க்க வேண்டும் ஒரு பெண் தன் உறவினரோடு சண்டையிட்டுக்கொண்டு நஞ்சுண்டு சாவதற்குத் தீர்மானம் செய்து சமயம் பார்த்து உண்பதற்கு நஞ்சைத் தேடி வைத்திருந்தாள். அருளுடையான் ஒருவன் அந்த நஞ்சினை எடுத்து மறைத்து விட்டான் அப்பெண் நஞ்சினைத் தேடிம் போது அது கிடைக்கவில்லை அவளும் அதனை உண்டு சாகாமல் உயிர்தப்பினாள். இவ்வாறு அவளை உயிர்தப்புவிக்கச் செய்யப்பட்ட களவு நல்லதாயிற்று. காமம் நல்லது என்பதற்கும் அவர் எடுத்துக்காட்டுத் தருகின்றார் காமம் என்பது ஆசை ஒருவர் சுவர்க்கத்தின் கண் சென்று போகந்துய்ப்பல் என்று கூறுவதும் உத்தரகுருவின் கண் போகந்துய்ப்பல் என்று கூறுவதும். நுன்ஞானம்கற்று வீடுபெறுவல் என்று கூறுவதும், தெய்வத்தைவழிபடுவல் என்று கூறுவதும் காமத்தின்பாற்பட்டவையே. இவ்வகைக் காமம் மேன்மக்களால் புகழப்படுகின்றது. மறுமைக்கும் உறுதி பயக்கின்றது. ஆகவே இது நல்லது.

இளம்பூரணரும் களவு, என்னும் சொற்கண்டுழியெல்லாம் அறப்பிறபடாலிதன்றல் அமையாது. "களவாது பிறர்க்குரிய பொருளை மறையிற் கோடல் இன்னதன்றி ஒத்தார்க்கும் மிக்கார்க்கும் பொதுவாகிய கன்னியரைத் தமர் கொடுப்பக் கொள்ளாது. கன்னியை தம் இச்சையினால் தமரை மறைத்துப் புணர்ந்து பின்னும் அறநிலை வழாமல் நிற்றலால் இ∴து அறமெனப்படும்" என்று கூறியுள்ளார். (களவியல் அவதாரிகை 13 செய்யுளியல் -நூற்பா-178)

**தமிழர் முறையே களவு**

களவினை ஆரியரது எண் வகைப்பட்ட மணவகைகளுள் காந்தருவத்தின் பாற்படும் என்பர். காந்தருவமாவது கந்தர்வ குமரரும் அவர் மகளிரும் தம்முள் எதிர்பட்டு மனமியைந்து கூடுவது போலத் தலைவனும் தலைவியும் எதிர்பட்டு மனமியைந்து கூடுவது, இதனை,

**அதிர்ப்பில்பைம் பூணாரும் ஆடவரும் தம்மில்**
**எதிர்ப்பட்டுக் கண்டியைதல் என்பகதிர்ப் பொன்யாழ்**
**முந்திருவர் கண்ட முனிவறு தன் காட்சிக்**
**கந்திருவர் கண்ட கலப்பு**

என்ற வெண்பாவால் உணரலாம் இங்ஙனம் தமிழ் மக்களது களவுப்புணர்ச்சியைக் காந்தருவமாகத் தொல்காப்பியனார் கூறினும் "தமிழர்க்கு அவ்வொழுக்கம் ஆரிய மக்களிடத்திருந்து வந்ததென்பது அவர் கருத்தன்று என்பதை நாம் உணர்தல் வேண்டும். இ∴து ஒற்றுமைவேற்றுமை காண்டற்கே" தமிழ் கூறு நல்லுலகத்து வழக்கும் செய்யுளுமே ஓதிய ஆசிரியரால் கூறப்பெற்றதாகும்

**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக் கூட்டம் காணுங் காலை**
**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**
**துறையமை நல்யாழ்த்துமையோர் (களவியல் -நூற்பா-1)**

என்ற தொல்காப்பயனாரின் நூற்பா மேற்கூறிய கருத்துகளைத் தெளிவாகப் புலனாக்கும். சிந்தாமணி ஆசிரியரும்இது தமிழ்வழக்கே என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

**இலையுறங்கண்ட கண்ணி**
**யீன்றமிழ் இயற்கை இன்பம் (சுரமஞ்சரி-9)**
**தேவர்பண்ணிய தீந்தொடை அன்சுவை**
**மேவர் கென்றமிழ் மெய்ப்பொருள் ஆதலின் (பதுமை-163)**

என்ற அவரது கூற்றுகளால் அதனை நன்கு அறியலாம்.

ஒருவனும் ஒருத்தியுமாக எதிர்ப்பட்டார் இருவர், புனலொடு புல் சாய்ந்தாற்போலத் தம் தலைமைக் குணங்களை இழந்து, மெய்யுறு புணர்ச்சியிற் கூடி மகிழும் இயல்பே காந்தர்வ மணம் என்பது .இங்ஙனம் கூடினோர் தம் வாழ்நாள் முழுவதும் கூடிவாழ்வர் என்ற கட்டாயம் இல்லை. எதிர்ப்பட்ட அளவில் வேட்கை மாறும் வரம்பற்று நிலையும் இவ்வகைமணத்திற்கு உண்டு. இன்று உலகியல் வழக்கில் இத்தகைய நிகழ்ச்சிகளை நாம் காணத்தான் செய்கிறோம் ஆனால் தமிழர் கூறும் களவொழுக்கமோ, இருவரும் ஒருவராயொழுகும் உள்ளப்புணர்ச்சியாகும். இதனை இறையனார் களவியல்

**"அதுவே,**
**தானே அவலே தமியர் காணக்**
**காமம் புணர்ச்சி இருவயின்ஒத்தல்" (இறையனார் களவியல் -நூற்பா-2)**

என்று குறிப்பிடும். இவ்வுள்ளப்புணர்ச்சி நிகழ்ந்த பின்னர் ஒருவரையொருவர் இன்றியமையா தொழுகும் உயிரோரன்ன செயிர்தீர் நட்பே சாந்துணையும் நிலைபெற்று வளர்வதாகும் உள்ளப்புணர்ச்சி நிகழ்வுற்ற பின்னர், ஒருவரையொருவர் பிரிவின்றியொழுகும் அன்பின் தூண்டுதாலால் உலகறிய மணந்து வாழும் கற்பென்னும் திண்மை தமிழர் ஒழுகலாறாகிய களவொழுக்கத்தின் முடிந்த பயனாகும். ஊலகியலில் நேரிடும் பல வகை இடையூறுகளால் ஒருவரையொருவர் மணந்து

கொள்ள இயலாமல் உள்ளப்புணர்ச்சியளவே கூடிவாழ்ந்து, பின்னர் இறந்த காதலரும் தமிழகத்தல் இருந்தனர் என்பதற்குத் தருமத்தன் விசாகை என்பாரின் வரலாறே சான்றாகும் (மணிமேகலை - சிறை செய்காதை -82-142) இவர்கள் இருவரும் யாழோர் மணமுறையில் பொருந்தியவர்கள் எனத் தம்மை நோக்கி ஊரார் கூறும் பழி மொழியை விலக்கித் தம் வாழ்நாள் முழுவதும் மெய்யுறுபுணர்ச்சியை விரும்பாது, உள்ளப்புணர்ச்சியளவில் நின்று உயிர்துறந்த வரலாறு நாம் ஈண்டு நினைவு கூர்தற்பாலது.

காந்தர்வ வழக்கில் மெய்யுறுபுணர்ச்சி முதற்கண் தோன்றும் அதன் பயிற்சியால் உள்ளப்புணர்ச்சி நிலைபெற்றுச் சாகுமளவும் காதலர்கள் கூடி காதலர்கள் கூடி வாழ்தலும் உண்டு உள்ளப்புணர்ச்சி தோன்றாது, தம் எதிர்ப்பட்டாரைக் கூடி மாறுதலும் உண்டு, சிந்தாமணியில் காணும் சீவகன் .தேசிகப்பாவை கூட்டம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். (சீவகவிந்தாமணி-பதுமையார் இலம்பகம்) என்றும் கிரியாநிலையில் நிறைகடாவாது அன்பினாற் கூடும் உள்ளப்புணர்ச்சியே களவொழுக்கத்தின் சிறப்பியல்பாகும். இதுவே தமிழியல் கூறும் களவு மணத்திற்கும் உள்ள உயிர்நிலையாய வேற்றுமையாகும். இதனால் தான் தொல்காப்பினார் இதனை ‘அன்பொபுணர்ந்த ஐந்திணை மருங்கிற் காமக் கூட்டம்’ என்று குறிப்பிட்டார். குறந்தொகையாசிரியர் ‘அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே’ என உணர்த்தினார் (குறந்தொகை-40)

ஆரிய மணமாகிய காந்தருவத்தி;ற்கு தமிழரின் களவுமணத்திற்கும் உள்ள வேற்றுமையையும் தமிழியல் வழக்கமெனச் சிறப்பித்து உரைக்கப்பெறும் களவொழுக்கத்தின் தூய்மையினையும் ஆரிய அரசன் பிரகத்தனுக்கு அறிவிக்கும் நோக்கத்துடன் தான் கபிலரின் குறிஞ்சிப் பாட்டும் எழுந்தது. இது, தலைவியின் வேற்றுமை கண்டு வருந்திய செவிலிக்குப் பாங்கி அறத்தொடு நிற்கும் விகற்பத்தை அற்புதமாகக் கூறுவதாகும். ‘சமயக்கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிய ‘பொருள் இது’ என்ற (கல்லாடம்-14) திருவள்ளுவரின் ‘இன்பப்பாலும் தமிழரின் காமக்கூட்டத்திற்கும் உள்ள வேற்றுமையைக் ‘கந்தருவர்க்குக் கற்பின்றிஅமையாது’ என்று விளக்கியுள்ளார் (களவியர் நூற்பா -1 இன் உரை)

**உரையாசிரியரின் கருத்து**

களவியல் உரையாசிரியர் ‘களவு’ என்னும் பெயர்க்குக் கூறியுள்ள காரணத்தையும் ஈண்டு அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது அவர்கருத்துப்படி மக்கள் தலையாயமக்கள், இடையாயமக்கள், கடையாயமக்கள் என்று மூவகைப்படுவர் எல்லாச்சமயத்தாரும் பெண் இன்பம் தீது என்று கூறியுள்ளனர். அந்த இன்பம் உண்டானால் சுற்றத் தொடர்ச்சி உண்டாகும் அத்தொடர்ச்சியால் கொலை, வெகுளி, செருக்குப் போன்ற குற்றங்கள் நிகழக்கூடும். இவற்றை எண்ணிப்பார்த்தே தலையாயமக்கள் பெண் இன்பத்தினின்றும் நீங்குவர். இடையாயமக்கள் பெண்களைப்பற்றி நூல்கள் மூலம் அறிவர். பெண் என்பது ஓர் எலும்புச் சட்டகம்: நாற்றமுள்ள கூடு ஒரு சிறந்த பொருளன்று, அது சிறந்த பெருளாயின் பூ, சாந்து, எண்னெய் முதலிய அணிகலன்களை அதற்குப் புனைய வேண்டியதில்லை. இவ்வாறு அவர்கள் உடம்பின் அசுத்த தன்மையை எண்ணிப் பெண்ணின்பத்தின்றும் நீங்கார் காரணம். அநாதி காலந்தொட்டுப் பல பிறப்பிடை ஆணும் பெண்ணுமாகப் பழகிப் போகந்துய்த்து வருவதேயாகும். அவர்களையும் பேரின்பத்துச்செலுத்த வேண்டியது அவசியம் எனவே இவர்கள் ஆணும் பெண்ணுமாக இவன் பதினாநாட்டைப் பிராயத்தனாய் இவனும் பன்னீராட்டைப் பிராயத்தனாய் ஒத்த பண்பும் ஒத்த நலனும் ஒத்த செல்வமும் ஒத்த கல்வியும் உடையவராய்ப் பிறிதொன்றற்கும் ஊனமின்றிப் போகம் துய்ப்பர். அப்போது அவர்களிடம் இதைவிடப் பேரின்பம் என்பதொன்றுண்டு என்று கூறினாலல் “அதை எங்ஙனம் பெறுவது?” என்று வினாவுவர். அப்போது அதனைத் தவத்தால் பெறலாம் என்று கூறவேண்டும். உடனே, அவர்கள் தாமும் தவஞ்செய்து பெற வேண்டும் என்று தவஞ்செய்வர் அப்போது வீடுபேற்றின் இன்பத்தை விரித்துரைக்க வேண்டும். அவ்வின்பம் பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு, அவலக்கலவை முதலியனயின்றி உள்ளது என்று கேட்டுத்தவமும் ஞானமும் புரிந்து அதனைப் பெறுவர் இவ்வாறு அவர்களை வஞ்சித்துக் கொண்டு சென்று நன்னெறிக்கண் செலுத்துவவதால் இம்முயற்சிக்குக் ‘களவு’ என்றும் பெயரிடப்பட்டது “களவியல்” கற்க அறம், பெருள், இன்பம், வீடு என்ற நான்கனையும் பெறலாமென்பது களவியலுரையாசிரியரின் கருத்தாகும்.

**களவின் நிலைகள்**

தமிழ் வழக்காகிய இக்களவு என்னும் கைகோள் நான்கு வகைப்படும் என்று இலக்கண ஆசிரியர்கள் கூறியுள்ளனர் தொல்காப்பியர்

**காமப்புணர்ச்சியும் இடந்தலைப் படலும்**
**பாங்கொடு தழா அலுந் தோழியிற் புணர்வுமென்று**
**ஆங்கநால் வகையினும் அடைந்த சார்வொடு**
**முறையென மொழிதல் மறையோர் ஆறே" (செய்யுளியல் நூற்பா -178)**

என்று கூறுவர் காமப்புணர்ச்சி இடந்தலைப்பாடு பாங்கற்கூட்டம், தோழிர் கூட்டம் என்ற நான்கும் காதல் ஒழுக்கத்தில் வரும் நான்கு நிலைகள் படிகள் ஓவ்வொரு நிலையிலும் பல நிகழ்ச்சிகள் உண்டு. தனித்தனி நிகழ்ச்சியைத் துறை என்று குறிப்பர் இலக்கண நூலார். இந்த நான்கு நிலைகளைச் சார்ந்து வரும் சிறு படிகளும் உள்ளன. அவற்றையெல்லாம் தொல்காப்பிம் விரிவாகக் கூறுகின்றது.

காமப்புணர்ச்சி என்பதற்குக் களவியலுரைகாரர் தலைமகனும் தலைமகளும் தமியராய் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுத்தன் உணர்வின்றி வேட்கை மிகுதியால் புணர்வது என்று கூறுவர் தலைமகனுடைய சிறந்த குணங்களும் வேட்கை மிகுதியால, புனல்ஓடவழிப்புல் சாய்ந்தாற்போல அமைந்து கிடக்க, இருவரும் புணர்தல் காமப்புணர்ச்சி என்று அவர் பெயர் வைப்பர். இதை இயற்கைப்புணர்ச்சி என்றும் தெய்வப்புணர்ச்சி என்றும் முன்னுறுபுணர்ச்சி என்றும் இலக்கண ஆசிரியர்கள் குறிப்பர். இவையெல்லாம் காரணப்பெயர்கள். புலவரால் கூறப்பெற்ற இயல்பினால் புணா;ந்தாராதலானும், கந்தருவ வழக்கத்தோடு ஒத்த இயல்பினால் புணர்ந்தாராதலானும். 'இயற்கைப்புணர்ச்சி' எனப்பட்டது. இருவரும் தெய்வத்தன்மையால் புணர்ந்ததாலும் முயற்சியும் உளப்பாடும் இன்றிப் புணர்ந்தாலும் 'தெய்வப்புணர்ச்சி' என்று கூறப்பெற்றது. இவள் நலம் இவனால் முன்னுற எய்தப்பட்டமையானும் இவன் நலம் இவளால் முன்னுற எய்தப்பட்டமையானும் 'முன்னுறு புணர்ச்சி' என்று குறியீடு செய்யப்பெற்றது.

இடந்தலைப்படுதல் முதலியவை இவ்வாறு "பாலதாணையால்" ஊழின் வலியால்-சந்தித்துக் காதல் செய்யும் காதலர்கள் அடுத்தடுத்துக் கூடுவர். இயற்கைப் புணர்ச்சி முடிந்த மறுநாள் தலைவன் 'யான் இவனை அடைந்தது விதியினால் தானே, இன்றும் அவ்விதி கூட்டுவிக்கும்' என்று எண்ணி முதல் நாள்கூடின இடத்திற்கே சென்று தலைமகளைச் சந்தித்துக் கூடுவான் இவ்வாறு மறு நாளும் முதல் நாள் சந்தித்த இடத்திற்குச் சென்று தலைவியைச் சந்தித்தலைத்தான் இடந்தலைப்படுதல் என்று இலக்கண நூலார்குறிப்பா் வாழ்க்கையில் இவ்வாறு சந்திப்பு ஏற்படுதல் அவ்வாறு எளிதான நிகழ்ச்சியன்று பெரும்பாலும் இம்முறை இடையீடு பட்டுத்தான் நிகழும். இவ்வாறு தலைவியினது கூட்டத்தாலோ பிறராலோ இடையீடு பட நேர்ந்தால் தலைவன் தன் வருத்தத்தினைப் பாங்கனுக்கு உணர்ததுவான் அவன் தலைமகள் இருக்கும் இடமறிந்து வந்து கூற, தலைமகன் அவ்விடத்துக்குச் சென்று, அவளைச்சந்திப்பான் இது தான் பாங்கற்கூட்டம். "பாங்கற்கூட்டம் நிகழின் இடந்தலைப்பாடு நிகழின் பாங்கற்கூட்டம் நிகழாது" என்று களவியல் உரைகாரர் கூறுவர். தலைவியை அவ்வளவு எளிதாகச் சந்திக்க முடியாது என்பது அவர் கருத்து (நூற்பா -3 இன் உரை) இதுவும் அடிக்கடி நிகழக்கூடியதன்று நிகழவும் முடியாது தலைவியுடன் நெருங்கிப் பழக்ககூடிய தோழியின் துணையிருந்தால் தான் இக்கூட்டம் அடிக்கடி நிகழ முடியும் என்று தலைமகன் எண்ணி, அவளை இரந்து பின்னின்று அவள் வாயிலாகக் கூடுவான். இது தோழியிற் கூட்டம் என்று வழங்கப்பெறும். இந்த நான்கு பெரும் பிரிவுகளே பல விகற்பங்களும் பகுதிகளும் உடையனவாக விரிந்து ஒரு கதை போல வந்து முடிகின்றன. இங்ஙனம் முடியும் களவு வரலாற்றில் பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி தலைவன், தலைவி என்ற அறுவருமே கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்கள் இவர்களைத் தவிர வேறு எவரும் பேசுவதற்கு உரியவர்களாக விதிக்கப்பெறவில்லை. இந்த நான்கு விதமான கூட்டங்களின் முழுவிவரங்களைப் பற்றி தொல்காப்பியர் கூறுகின்றது ‘‘திருக்கோவை’’ என்ற நூலைப்படித்தால் களவியலின் பல்வேறு நிகழ்ச்சிகளையும் இலக்கியச் சான்றுகளுடன் அறியலாம்.

**கற்பின் படிகள்**

களவொழுக்கத்திலுள்ளது போலவே கற்பொழுகத்திலும் பல படிகள் உள்ளன. இவற்றைத் தொல்காப்பியர்,

**மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்**
**இவைமுத லாகி இயனெறி திரியாது**
**மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்**
**பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே"**

என்று ஒருவாறு தொகுத்துக் கூறுவர். கரந்து ஒழுகும் ஒழுக்கம் வெளிப்படுதல், தமர் கொடுப்பத் தான் பெறுதல் ஆகிய இரண்டு முதலாகிய இயற்கை நெறியில் தப்பாது மகிழ்தல், புலத்தல், ஊடல் உணர்தல், பிரிதல் ஆகிய படிகள் கற்பின் உள்ளன என்று கூறுவர் ஆசிரியர், இங்கு மலிதல் என்பது இல்லொழுக்கமும் புணர்ச்சியும் முதலாயவற்றால் மகிழ்தல் புலவி என்பது புணர்ச்சியால் வந்த மகிழ்ச்சி குறைவுபடாமல் காலங்கருதிக் கொண்டு உய்ப்பதோர் உள்ள நிகழ்ச்சி ஊடல் என்பது உள்ளத்து நிகழ்ந்தானைக் குறிப்பு மொழியாலன்றிக் கூற்று மொழியால் உரைப்பது. அங்ஙனம் ஊடல் நிகழ்ந்தவழி அதற்கேதுவாகிய பொருளின்மை உணர்வித்தல் எனவும் அதனை உணர்தலால் உணர்வு எனவும் இது வழங்கப்பெறும் புலவியாயின் குளிர்ப்பக் கூறலும் தளிர்ப்ப முயங்கலும் முதலியவற்றால் நீங்குதலின் அதற்கும் உணர்த்துதல் தேவை இல்லை இவ்வாறு பேராசிரியர் என்ற உரையாசிரியர் விளக்குவர் (செய்யுளியல் நூற்பா 187 பேராசிரியர் உரை) பிரிவு என்பது இலை நான்கினொடும் வேறுபடுதலின் பிற் கூறினார் இதனை ஊடலொடு வைக்கவே, ஊடலிற்பிறந்த துனித்தல் என்பது வெறுத்தல் அது காட்டக் காணாது கரந்து மாறும் இயல்பினது. அறுவகைப் பரிவும் பிரிவு என்பதிலேயே அடங்கும்.

இந்த இரண்டும் கைகோள்களிலும் தலைவன் தலைவி, தோழி முதலியோர் பேசக்கூடிய இடங்களையெல்லாம் தொல்காப்பியர் தொகுத்து கூறியுள்ளார் இவற்றையெல்லாம் இங்குக் கூறினால் மிகவும் விரியும் இவர்களுள் களவொழுக்கத்தில் கூற்று நிகழ்த்துதற்குரியோர் யாவர் என்வதயும் வரையறை செய்துள்ளார் தொல்காப்பியர் இந்த முறையில் இவர்கள் கூற்றுகள் நிகழும் படியாகத் தான் கவிஞர்கள் பாடல்களை இயற்றுவர் இதுவே தொல்காப்பியர் வகுத்த இலக்கிய மரபு.

**பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி**
**சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியொடு**
**அளவியல் மரபின் அறுவகையோரும்**
**களவினில் கிளவிக்கு உரியர் என்ப" (செய்யுளியல் -நூற்பா-181)**

என்ற நூற்பாவால் பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி என்பவர்கள் சிறப்பாகக் களவினுள் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்கள் என்பது தெரிகின்றது. மேற்கூறிய அறுவரும் சேர்ந்து கற்பினுள் கூற்று நிகழ்த்துவதற்குரியவர் என்பதைத் தொல்காப்பியர்

**பாணன் கூத்தன் விறலி பரத்தை சான்றஅறிவர் கண்டோர்**
**பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா**
**முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்**
**தோன்னெறி மரபிற் கற்பிற் சூரியர்" (செய்யுளியல் -நூற்பா -182)**

என்ற நூற்பாவால் உணர்த்துவர்.

**வாயில்கள் உரைக்கும் முறை**

அகப்பொருள் ஒழுகலாற்றில் உரையாடுதற்குரிய பாணர் கூத்தர் முதலியோர், தாம் தாம் சொல்லத்தகுவனவற்றைத் தவறின்றி வெயிப்படையாகக் கூறுதல் வேண்டும் என்பது தொல்காப்பியரின்விதி

**வயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல்**
**தூவின் றுரிய தத்தங்கூற்றே" (பொருளியல் -நூற்பா -45)**

மேற்குறித்த வாயில்கள் அல்லாத தலைமகளும் நற்றாயும் தாம் கூறக் கருதியவற்றை மறைத்துச் சொல்லப்பெறுவர் என்பது ஈண்டு அறியத்தக்கது உரையாசிரியரும் வாயில் களாவார் குற்றேவல் முறையிரைதலானும் வெளிப்படக் கூறாக்கால் பொருள், விளங்காமையானும். பொருள் விளங்காதாலின் இவர்களது கூற்றிற்குப் பயனின்மையானும் அவர்கள் மறைத்துக் கூறாது வெளிப்படைவே கூறுதல் வேண்டும் எனவும் விளக்கியுள்ளமை ஈண்டு கருதத்தக்கது. (பொருளியல் - நூற்பா - 4இன் உரை)

களவுக்காதல் பற்றிய நிகழ்ச்சிகள் உலகிலுள்ள பல மொழிகளின் இலக்கியங்களிலும் காணப் பெறுகின்றன. ஆனால், தமிழ்க்கவிதைகளில் சில இலககணம் வரம்புடன் அந்நிகழ்ச்சிகள் சித்திரிக்கப் பெறுவதைப் போலும் திணை, துறை முதலிய ஒழுங்குகள் அமைந்திருப்பன போலும் பிற நாட்டு இலக்கியங்களில் காண முடியாது.இந்த வரையறையுடன் அமைந்த கவிதைகள் உலகில் எம்மொழியிலும் காணப்பெறவில்லை.

**பயன்பட்ட நூல்கள்**

1. இளம்பூரணர் (உ) தொல்காப்பிம் பொருளதிகாரம், திருநெல்வேலி சைவசித்தாந்தம் நூற்பதிப்புக்கழகம், சென்னை 18. பதிப்புஆண்டு 2006.
2. இறையனார் களவியல் - சைவசித்தாந்தம் நூற்பதிப்புக்கழகம், சென்னை 18.பதிப்புஆண்டு 2006.
3. சீவக சிந்தாமணி கழகவெளியீடு

**ஆய்வுக்கட்டுரைகள்**

1. பாலகிருஷ்ணன் .அ - மதுரைக்காஞ்சியில் ஐந்நில மக்கின் வாழ்க்கை
2. பாக்கியலட்சுமி. சு - அகநானூற்றில் மனித உரிமைகள்